செ.வெ.எண்: 207 நாள்: 27.03.2024

**புதுக்கோட்டை மாவட்டம்**

**பத்திரிகைச் செய்தி**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளதால் தேர்தல் விதிமுறைகளை மீறி ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)க்கு மேல் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் இதர பொருட்களை தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுக்கள் மூலம் பறிமுதல் செய்யப்படுகிறது.

அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட பணம் தேர்தல் நடத்தை விதிகளுக்கு மீறிய வகையில் இல்லாமல், தனது சொந்த தேவைக்காக கொண்டு செல்லப்பட்ட பணம் என்பதற்கு உரிய ஆவணங்களை மாவட்ட குறைதீர்க்கும் குழுவில் தெரிவிக்க தினந்தோறும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக, புதிய வளாகத்தில், இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை பறிமுதல் செய்யப்பட்ட தொகை / பொருட்களுக்கான தங்கள் வசம் உள்ள ஆவணங்களை மாவட்ட குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்படி ஆவணங்கள், முறையாக இருக்கும் பட்சத்தில் மாவட்ட குறைதீர்க்கும் குழுவினரால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் இதர பொருட்களுக்கான விடுவிப்பாணை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பாக மேலும் விபரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) அவர்களின் தொலைபேசி எண் 8807823314-க்கு தொடர்பு கொள்ள இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai